May day as paid holiday

* 248 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether the Government propose to declare May day as a paid holiday; and

(b) when it will be given effect to?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்: (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தேசிய பண்டிகை விடுமுறைகள்) சட்டத்தைத் திருத்துவதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொண்டு வருகிறது. இதை செயல்படுத்துவதற்கான மசோதா ஒன்று விரைவில் சட்டமன்றப் பேரவையில் கொண்டுவரப்படும்.

THIRU K. VINAYAKAM: In the Bill that is in the offing and that will be introduced in this House, will the Government take care to bring within its purview the workers working in the private sector also? (Interruption) In that event, will the Government declare a holiday with salary for our own workers also?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்: இந்த அரசாங்கத்தினுடைய எண்ணமே அதுதான். இதைப்பற்றி தொழில் அதிபர்களும், தொழிலாளர் பிரதிநிதிகளும் கூடி விவாதித்து மாநிலத் தொழிலாளர் ஆலோசனை வாரியத்தில், (ஸ்டேட் லேபர் அட்வைசரி போர்டு) இதுபற்றி தீவிரமாக முடிவு எடுத்து அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். அதன்பேரில் முதல் அமைச்சர் அவர்களும், மற்ற அமைச்சர்களும் தீவிரமாக ஆலோசித்து, இந்த முடிவுக்கு வந்தார்கள்.

புதிய நெல் வகை

■ 237 வினா—திரு. பெ. மலேச்சாமி: மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆடுதுறை அரசு விதைப் பண்ணையில் ஆடுதுறை 27-க்குப் பிறகு புதிய நெல் வகை ஏதும் கண்டறியப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) & (ஆ) ஆம், 1966-ம் ஆண்டில் ஆடுதுறை 28 வகை நெல் உருவாக்கிப் புழக்கத்துக்கு விடப்பட்டது. இது ஆடுதுறை 3, சீனாகம் சி.எச். 42 இவற்றின் கலப்பினமாகும். இது ஆடுதுறை 3-ஐ விட அதிக விளைச்சலைக் கொடுக்கக்கூடியதாகும். ஆனால் ஆடுதுறை 27 உடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது விளைச்சலிலும் தானிய தரத்திலும் இது மேம்பட்டதல்ல. இது விதைத்தது முதல் 102 நாட்களில் அறுவடையாகும் பயிராகும். தண்ணீர் தேங்கி நின்றாலும் இது கதிர் சாயும் தன்மையில்லாதது. ஆடுதுறை 27-ஐக் காட்